10 ஸுக்ஷ்மமாயுள்ள க்லேசங்களை விலாபனம் என்ற ஸம்ஸ்காரரூபமான க்ரியையால் துலைக்கலாமே யொழிய வேருவழியில்லை. விலாபனக்ரியை குருமுகவேத்யம்.

11 அவைகளினால் உண்டாகும் ஸுகாதி வ்ருத்திகளை த்யானம் என்றசித்த ஏகாக்ரத்தினால் துலைக்கலாம்.

12 அவித்யாதி க்லேசமூலமாயுள்ள வாஸனைகள் இந்த ஜன்மத்திலும் அனுபவிக்கப் படலாம். அல்லது ஜன்மாந்திரத்திலும் அனுபவிக்கப்படலாம்.

13 அவித்யாதிகள் அனுபவிக்கும் காலம்வரை, ஜாதி, ஆயுஸ், போகம் என்ற மூன்றும் ஏற்படும். ப்ராஹ்மணாதி ஜாதி, சிரகாலம் ஆயுஸ், போகம் என்பது விஷயங்கள்.

14: முற்கூறிய அவைகள் புண்யா புண்யங்களுக்கு ஹேது வாய், ஸுகதுக்க பலன்களை விளைவிக்கும். இதுவே ஸர்வ ஸாதா ரணம்.

15, க்லேசாதிகளின் உண்மையை யறிந்த யோகிக்கோ வெ னில், போகஸாதனமாயுள்ள யாவற்றும், பர்யவஸானத்தில் தாபத் தையுண்டுபண்ணி துக்க ஸம்ஸ்காரத்திற்கே ஹேதுவாவதால், விஷம் கலந்த அன்னம்போல, ஆதி மத்யாந்த காலத்திரயத்திலும் ப்ரதிகூல வேதநீயமாகவே முடியும்.

16. பூததுக்கம் அனுபவித்தாய்விட்டது. தாத்காலம் என்பது க்ஷணிககாலமானதால் அனுபவிக்கப்படுகிறதைத் தடுக்க முடியாது. ஆகையால் இன்னும் பரிபாகத்தை அடையாத அனு கதம் ஒன்றையேதான், தடுத்துத் தூலைக்கமுடியும்.

17. சித்ரூப புருஷன் த்ரஷ்டா; த்ருஸ்யம், புத்திதத்வம் விவேகக்கியாதி உண்டாகாத காலம்வரையில் போக்த்ரு போக்யத்வ மூலமாய் ஏற்படும் சேர்க்கைக்கு ஸம்யோகமென்று பெயர். அந்த ஸம்யோக ஸன்னிதானம் ஹேயமான துக்க ஸம்ஸாரத்திற்கு ஹேது.

18. த்ருச்யத்தினுடைய, ஸ்வரூபம், கார்யம், பிரயோஜனம் ஆக மூன்றும் இங்கு விவரிக்கப்படும்:-(i) ஸத்வதர்மம் ப்ரகாசம். க்ரியா என்னும் பிரவிருத்திரூபம் ரஜஸ், ஸ்திதிஸ்னும் அக்ஞா னரூபம் தமஸ். இவைகள் னதினுடைய ஸ்வரூபமோ, (ii) பஞ்ச பூதங்களும் இந்திரியங்களும் அபின்ன ஸ்வரூபமாயுள்ள கார்ய மென்ற பரிணாம குணம் எதினுடையதோ. (iii) போகமென்ற விஷயானுபவமும், அபவர்கம் (அரிஷட்வர்கம்போனது) என்ற ஸம்ஸார நிவர்த்தியும் இவைகளிரண்டும் பிரயோஜனம் எதினுடைய தோ, அதற்கு, த்ருச்ய மென்று பெயர்.

19. குணங்களின் பாகங்கள் அதாவது பிரிவுகள் என்ற அவஸ்தாவிசேஷங்கள் நால்வகைப்படும் (1) விசேஷங்கள், என்றதுகள் பஞ்சமகாபூதங்களும் இந்திரியங்களுமே (2) அவிசேஷங்களென்றதுகள், பஞ்சதன் மாத்திரைகளும் அந்த: காணமுமே. (3) லிங்க மாத்திரமென்றது புத்தியெனப்படும். (4) அலிங்கமென்பது அவ்யக்தம் அல்லது ப்ரதானம்.

20. த்ரஷ்டாவின் ஸ்வரூபம்: த்ரஷ்டா வென்ற புருஷன் சேதனமாத்திர ஸ்வரூபன் அவன் சுத்தன். ஆனபோதிலும் விஷயோபரக்த ஞானங்களை அவ்யவதான ரூபமாய்ப் பார்க்கிறான். லிங்கிமாத்திரோபகாரி. புத்தியில் விஷய உபராககுணம் தட்டுப்படும் காலம் வரை புருஷனுடைய த்ரஷ்ட்ருத்வகுணம் இருக்கும்.

21. புருஷனுக்கு, போக்த்ருத்வ ஸம்பாதனமே பிரயோஜனம் எதினுடையதோ அதுவே மேலேகூரிய லக்ஷணங்களுடன் கூடின த்ருச்யம் எனப்படும்.

22. விவேகக்கியாதி பர்யந்தம் போகஸாதனம் உண்டுபண்ணுவதே த்ருச்யத்தின் கார்யம். ஆனபோதிலும் க்ருதார்த்தனை யுத்தேசித்து நசித்துவிடும். அப்படியிருந்தபோதிலும், ஸர்வபுருஷ ஸாதாரணத்வத்தையிட்டு முக்தியடைந்தவனைத்தவிர இதரர்களை யுத்தேசித்து நசிக்காமலிருக்கிறது. அதனால்தான், ஒருவனுக்கு முக்தி வந்தபோது, பிரளக்கெல்லாம் அதேஸமயத்தில் முக்தியில்லை என்ற பிரஸங்கம் ஏற்படுகிறது.

23 த்ருச்யஸ்வபாவத்திற்கு, ஸ்வசக்தி என்று பெயர். ஸ்வாமி சக்திக்கு த்ரஷ்ட்ருத்வம் என்று பெயர். இரண்டினுடையவும் ஸ்வரூப உபலப்திக்குக் காரணம் ஸம்யோகமென்று பெயர். அந்த ஸ்வரூபம் அநிர்வசநீயம். நித்யவ்யாபகத்திற்கு ஸம்பந்தபாவம் கூறுவது நியாயமில்லை. ஆகையால் போக்த்ருபோக்ய ஸ்வரூபம், ஸ்வரூபஸம்பந்தமேயாகும்.

24. மேலே ஸம்யோகத்திற்குக் காரணம் முற்கூறிய அவித்யை-

25. அவித்யையோ அபாவம். அதாவது இல்லாதது இருக்கிறதுபோல் காணப்படுகிறது. ஞானத்தினால் மாத்திரம் மேற்படி அபாவம் அனுபவிக்கப்படும். அந்த நிலைமையில், கார்ய ஸம்யோகத்திற்கு அபாவம் உண்டாக அவகாசம் ஏற்படுகிறது. அதற்குத்தான் ஹானம் என்று பெயர். த்ருக்ஸ்வரூபமாயிருக்கிற புருஷனையுத்தேசித்து அதுவே கைவல்யமெனப்படும்,

26. புருஷகுணத்தை விட்டு வேறுபட்ட விவேகக்கியாதி என்ற குணம், நித்ய நிரந்தரப்பிரஸாதத்தையடைவதே, ஹானோபாயமாகும்.

27. விவேகக்கியாதியின் ஸ்வரூபமாவது; உத்பன்னமான விவேகஞானத்திற்கு, அறியவேண்டிய விவேகரூபப் பிரக்ஞையானது, நிராலம்பம் அனுபவிக்குமுன், ஏகாக்ர அவஸ்தையான ஸாலம்பன ஸமாதி, பூமி பர்யந்தம் 7 (ஏழு) ப்ராகாரத்தோடு கூடினதாக விளங்கும். அறியவேண்டியதனைத்தும் அறியப்பட்டாய் விட்டதென்றது, பர்யவஸானம்.

28. இனிக் கூறப்போகிற அஷ்டாங்கயோக அனுஷ்டானத்தினால், அசுத்திக்ஷயம் கொஞ்சம் கொஞ்சமாய் ஏற்பட ஏற்பட, வரவர, ஞானப்பிரகாசம் உண்டாகும். மேற்படி பர்யவஸான ஞானதீப்திக்கு விவேகக்கியாதி என்று பெயர். ஆகையால் அதற்குக் காரணம் யோகானுஷ்டானம்.

29. யமம், நியமம், ஆஸனம், ப்ராணயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, த்யானம், ஸமாதி ஆக மேற்படி யோகம் 8 வகைப்படும். அவைகள் முறையே பின் சூத்திரங்களில் விவரிக்கப்படும்.

30. அஹிம்ஸை, சத்யம், அஸ்தேயம், ப்ரஹ்மசர்யம் அபரிக்ரஹம் என்று யமம் ஐந்து வகைப்படும். (1) ப்ராணியோகத்திற்கு காரணம் ஹிம்ஸை. அது இல்லாதது அஹிம்ஸை. (2) வாக்கினாலும் மனதினாலும் யதார்த்தம் பேசுவதும், நினைப்பதும், ஸத்யமாகும். (3) பிறர் பொருளை அக்ரமமாக ஸ்வீகரணம் பண்ணுதகுணம் அஸ்தேயமாகும். (4) உபஸ்த ஸம்யமத்திற்கு ப்ரஹ்மசர்யமென்று பெயர் (5) போகஸாதனங்களை ஸ்வீகரணம் செய்யாதிருத்தலுக்கு அபரிக்ரஹம் என்று பெயர். ஆக 5ம் யமங்கள்.

31. அவைகளின் விசேஷங்களாவன:— வேதங்களும் ஜாதி, ப்ராஹ்மணஜாதி; தேசம், நீத்தார்தாதி; காலம், சதுர்தசியாதி; ஸமயம், ப்ராஹ்மணப் பிரயோஜனாதி; இதுகளை எதிர்பாராமல் நிரந்தரம்ஸர்வ பூமிகளிலும் அனுஷ்டிக்கப் படவேண்டிய மகாவ்ரதத்தில் சேர்ந்த வைகள்.

32. சௌசம் இருவகைப்படும் (1)ம்ருத்ஜலாதி பாஹ்யம்; 1ம் பாதம் 33வது சூத்ரத்தில் கண்ட, மைத்ரியாதி 4 குணங்களால் சித்தப் பிரஸாதனம் ஏற்படுவது ஆந்தரம் (2) யோக்கியமாய் பாடுபட்டு கிடைத்த யத்நச்சாலாபத்தில், கிடைத்ததே போதுமென்ற த்ருப்திக்கு சந்தோஷமென்று பெயர். பாக்கி மூன்றும் IIம் பாதம் 1வது சூத்ரத்தில் வியாக்கியானம் செய்தாய் விட்டது வேதி ஐந்தும் நியமங்கள்.

33. பின்வரும் விதர்க்க பாதனைகள் ஏற்படும்போது ப்ரதி பக்ஷ பாவனை செய்தால் யோகஸித்தி சுலபமாய் ஏற்படும். ப்ரதி பக்ஷ பாவனைகளால் விதர்க்க பாதனைகள் தூலியும். இந்த காரணத்தால், யமநியமங்களும் யோகாங்களாகும்.

34. மேற்சொன்ன ஹிம்ஸாதிகள் விதர்க்கங்கள். க்ருதம், காரிதம், அனுமோதிதம் என்று 3விதப்படும் அவைகளுக்குக் காரணம் லோபம், க்ரோதம், மோஹபூர்வகமாக மூவகைப்படும். ம்ருது, மத்யம், அதிமாத்ரை என்று மூன்று வேகங்களுண்டு. அவைகளின் பலன் துக்கம், அக்ஞானம், அனந்தபலமுமாகும்.

35. அஹிம்ஸாப்பிரதிஷ்டை ஏற்பட்டால் அந்த சன்னிதியில் ஜாதி வைரம் நீங்கும். உதாஹரணம்:— பசுவும் புலியும் ஒரு துறையில் தண்ணீர்குடிக்கும். பாம்பும் கீரியும், எலியும் பூனையும் முறையே கூடி விளையாடும்.

36. சத்யப் பிரதிஷ்டையால் க்ரியாபலம் உடனே ஸித்திக்கும்: விச்வாமித்ரன் தபோமஹிமையால் த்ருசங்குவை ஸ்வர்க்கம் ஏறச்செய்ததும், அஸ்தீகர் ஜனமேஜயன் யக்ஞத்தைத் தடுத்து தக்ஷகனைக் காப்பாற்றினதும் புராணவிவரணங்கள். யாகம் செய்யாமலே யாக பலத்தை ஸித்தன் வார்த்தை மூலமாய் ஒருவன் அடை

வானேயாயின் அந்த ஸித்தனுடைய ஸாமர்த்தியத்தைப் பற்றி சொல்லவேண்டியது என்ன இருக்கிறது.

37 அஸ்தேயத்தை அப்பியாஸம் செய்கிற யோகிக்கு நிரபி லாஷமாயுள்ள அவனே ஸர்வரத்னங்களும் வந்து உபஸ்தானம் செய்யும்.

38. ப்ரஹ்மசர்ய ப்ரதிஷ்டையினல் நிராதிசயமான ஸாமர் த்தியங்கள் லபிக்கும். அணிமாதிகள் ஸித்திக்கும்.

39. நிர்விஷய ஞானஸ்தைர்யத்தின் பிறகுதான் ஜன்மம் எப் படி வந்தது என்ற போதம் நன்றாய் உண்டாகும்:— ஜன்மாந்தர மும் தெரியும்.

40. சௌசபாவனையால் தன் சரீரத்திலேயே வெறுப்புண்டா கும். அவன் பிறருடன் ஸம்ஸர்கம் செய்வானு?

41. தமஸ், ரஜஸ் நீங்கி ஸத்வப்பிரகாசம் அதிகரிக்கும் மன தில் ப்ரீதி அதிகரிக்கும்; ஏகாக்ரதா என்னும் மனஸ் ஸ்தைர்யம் உண்டாகும். விஷய பராங்முகனும் இந்திரிய ஜயபூர்வமாக ஆத்ம தத்வத்தில் த்ருடபுத்தி ஏற்படும். அதன் பிறகு ஆத்ம தர்சனத் தின் பொருட்டு சித்தஸ்தைர்யம் உண்டாகும் இதுகள் சௌச பலன்கள்.

42. ஸந்தோஷத்தினல் ஏற்படும் ஆத்மஸுகம், பாஹ்ய ஸுகத்தைக் காட்டிலும் கோடி மடங்கு உயர்ந்ததாகும்.

43. தபஸ் அதிகப்பட, அதிகப்பட, அசுத்திக்ஷயம் ஏற்ப டும். காயேந்திரியங்களில் அணிமாதி ஸித்திகள் உண்டாகும்.

44. ஸ்வாத்தியாயத்தால் இஷ்டதைவத்தின் சேர்க்கை ஏற் படும். அதாவது புரஸ்சர்யாக்கிரியையால் ப்ரத்யக்ஷமாகும்.

45. ஈச்வரப் பிரணிதானத்தின் மூலமாய் ஸமாதி ஸித்தி லபிக்கும்.

46. ஆஸன ஜயம் ஏற்பட்டால் முக்தி ஹஸ்தகதமாகும். ஆஸனத்தால் ஏற்படக்கூடிய க்லேச நிவர்த்தி வரும்போது ஸ்திர சுகம் தானே அமையும்.

47. ப்ரயத்ன சைதில்யத்தால் மூலாதார ஸித்தியையும் அனந்த ஸமாபத்தியால், ஸஹஸ்ரார ஸித்தியையும் அடையலாம்.

48. சீதோஷ்ணாதி த்வன்வ தோஷங்கள் அப்போது நிவர்த்தியாகும்.

49. பூரக ரேசகமில்லாத ஸ்தம்ப விருத்திக்குப் பிராணாயாமம் என்று பெயர்.

50. ரேசக மென்றும், பூரகமென்றும், கும்பகமென்றும். 3 வகைப் பிராணாயாமமாகும். தேசம், காலம், சங்க்யையாலும் தீர்க்க சூக்ஷ்மங்களென்றும் பலவிதப்படும்.

51. ரேசக, பூரகமில்லாத கும்பகவ்ருத்திக்கு 4வது கும்பகம் என்று பெயர். முன் சொன்னது அனுலோமித மென்றும் இந்த சூத்திரத்தில் சொல்லப்படுவது ஆலோமித கும்பக மென்றும் அறிக.

52. க்லேச ரூபமான ஆவரணம் அப்போது விலகும்.

53. அதன் பின் விக்ஷேபம் நீங்கி, யோகதாரணை லபிக்கும்.

54. அதன் பின் இந்திரியங்கள் பாஹ்ய விஷயங்களில் ப்ரவ்ருத்திக்காமல் அந்தர்முகப்பட்டு வச்யப்படும். சித்தஸ்வரூபத்திற்கு அனுகாரமாயிருக்கும் அதாவது உற்றதாயிருக்கும் அவஸ்தைக்குப் ப்ரத்யாஹாரம் என்று பெயர்.

55. அப்புறம் பாஹ்ய விஷயங்களில் நியமானமாயிருந்தாலும் அவைகள் அப்படி (அதாவது முன் போல்) பஹிர்முகமாய்ச் செல்லாமல் பரம வச்யத்தை அடையும். யம நியமங்களென்ற விதையினால், ஆஸனம் என்கிற அங்குரம் தோன்றி, ப்ரத்யாஹாரம் என்ற புஷ்பத்துடன் த்யான, தாரணை, சமாதி என்னும் பலங்களுடன் ஞானபூமி ப்ராகாசிக்குமென்றும் உணருக.

---

3 விபூதி பாதம்.

1. விஷயாந்தர பரிஹாரபூர்வகம், நாபிசக்ராதி ஸ்தானங்களில் சித்தத்தை பந்தம் செய்து, சித்த ஸ்திரீகரணம் ஏற்படுவதற்கு தாரணை என்று பெயர். முதல் 5 யோகாங்கங்களும் ஸித்தியான பிறகு, ஜிதத்வந்த்வமான காயத்துடன், நிர்பாதமான தேசத்தில், சம்பிரக்ஞாத ஸமாதியில் அப்பியாஸத்தை உத்தேசித்து, சேதஸ்ஸின் ஸ்திரீகரணம் செய்ய வேண்டிய தென்று அறியவும்.

2. ஏகதானதாப்பிரத்யயப் பிரவாஹத்தை உண்டு பண்ணுகிற யத்னத்திற்கு, த்யானம் என்று பெயர்.

3 த்யான ஸ்திமிருதி ஏற்பட்டு அர்த்த மாத்திரம் புலப்பட்டு ஸ்வரூப சூன்யம் போல் ஏற்படும் அனுபவத்திற்கு, ஸமாதி யென்று பெயர். அச்ருத ஞானமும் ஏகாக்ரதையும் ஏற்படும்

4. யோகாங்கத்ரயத்தினுடைய காந்திதி ஸம்க்ஞைக்கு, ஸம்யமம் என்று பெயர். (சாஸ்த்ர பரிபாஷை).

5. ஸம்யம ஸித்தியால், குறிப்பிட்ட விஷயத்தில், ப்ரக்ஞா லோகம் ஏற்படும்.

6. ஸம்யமத்தின் வினியோகம்:—ஸ்தூல சூக்ஷ்மாலம்பன விஷயங்களில் சித்தஸ்தைர்ய பூர்வம், உத்தரோத்தர பூமிகளை ஜயிப்பதே யாகும். III, 27 III 49 III 50 களையும் பார்க்கவும்.

7. 6. 7. 8 அங்கங்கள் முன் 5 அங்கங்களைக் காட்டிலும் சம்பிரக்ஞாத ஸமாதி நிஷ்பாதன விஷயத்தில் அந்தரங்கமாகும்.

8. அஸம் பிரக்ஞாத ஸமாதி நிஷ்பாதன விஷயத்தை யுத்தேசித்து, பஹிரங்கமாகும்.

9. க்ஷிப்தம், மூடம், விக்ஷிப்தம் என்ற மூன்று பூமிகளுக்குவ்யுத்தானம் என்று பெயர். ப்ரகிருஷ்ட ஸத்வபிரகாசம் வ்ருத்தியாய் ஏற்படும் சேதஸ்ஸின் பரிணமத்திற்கு நிரோதம் என்று பெயர். இந்த இரண்டினாலும் ஸம்ஸ்காரங்கள் உண்டு. நிரோதம் அதி

கரிக்க அதிகரிக்க, வ்யுத்தான ஸம்ஸ்காரங்கள் வாவாக் குறையும். நிரோதமும், க்ஷணமும், ஸமமாகிற அன்வயத்திற்கு நிரோத பரிணமம் என்று பெயர்.

10. மேற்கூறின நிரோத ஸம்ஸ்காரத்தால் ப்ரசாந்த வாஹிதா ஏற்படும், அதாவது சித்தம் ஸத்ருசப்ரவாஹ பரிணமியாய் ஆகும். இதற்குத்தான் ஏகதானதாப்ரத்யயப்ரவாஹம் என்று பெயர்.

11. சித்தத்திற்கு ஸர்வார்த்ததா (அதாவது விகேமம். ஏகாக்ரதா மற்றொரு தர்மம். மூன்றையே மூதல குறைய இரண்டாவது வ்ருத்தி உதயம் ஆகும். ஸத்அதிகரிக்க சித்தத்தில் இரண்டு அன்வயமும் உ— —றைய ஸமாதி பரிணமம் என்று பெயர். மூன்று சூத்ரத்திற்கும் இந்த சூத்ரத்திற்கும் விந்தியாஸம் யாதெனில் வ்யுத்தான ஸம்ஸ்காரத்தைத் தடுப்பது நிரோத மென்று அங்கு கூறப்பட்டது, இங்கு, விசேஷபத்தின் அத்யந்த திரஸ்காரத்தால் மருபடி உண்டாகாமல் ஏகாக்ரதா ரூப தர்மத்தின் உதயமாய்விட்டதென்றது, விசேஷம்.

12. ஸமாஹித சித்தத்தின் ஒரு வ்ருத்தி விசேஷத்திற்கு சாந்தம், என்று பெயர். மற்றொன்றுக்கு, உதிதம், என்று பெயர். இரண்டும் ஸமாஹித சித்தத்திற்குத் தூல்யங்கள்தான். ஏகரூபத்தை யவலம்பிப்பதால் ஸத்ருசங்கள் இரண்டிலுரும் ஸமாஹித சித்தத்தின் அன்வயமாயிருப்பதால் ஏகாக்ரதா பரிணமமென்று கூறப்படும்.

13. 9, 11, 12, சூத்ரங்களில்கண்ட சித்தபரிணமங்களால் ஸ்தூல சூக்ஷ்ம பூதங்களிலும், ஞானேந்திரிய கர்மேந்திரியங்களிலும் உள்ள, தர்மலக்ஷண அவஸ்தாபேதத்தினால் மூன்றுவித பரிணமங்களும், வியாக்கியானம் செய்யப்பட்டதென்று தெரிந்து கொள்ளவேண்டியது. ஒருக்ஷணமாவது பரிணமமில்லாதது கிடையாது. ஆகையால் அவஸ்திதமாயிருக்கிற தர்மிக்கு ஒரு தர்மம் நிவர்த்தியானால் மற்றொரு தர்மாந்தரோபத்தி ஏற்படுகிறது.

14. தர்மலக்ஷணமாவது:—சாந்தம், அதாவது க்ருதஸ்வவ்யாபாரமாயுள்ளதுகள், உதிதம் அதாவது தற்காலத்தில் ஸ்வவ்யாபாரத்தை செய்கிறவைகள், அவ்யபதேச்யம் அதாவது சக்திஸ்வரூபமாயிருப்பவைகள். அவைகளின் சக்திக்கு தர்மம் என்று பெயர். மேற்கண்ட மூன்றுவித தர்மங்களையும் ஸ்வீகரிக்கிறவன் தர்மி. உதாஹரணம், தட்டானால் ஸ்வர்ணம் பல பூஷணாகாரத்தை யடைகிறது.

15. மேற்கூறிய தர்மங்களினுடைய க்ரமங்கள் மாறுபடும் போது பரிணாம, அன்யத்வமும் ஏற்படும்.

16. சேதஸ்ஸின், சுத்தஸத்வப்ரகாசத்தால் யோகியானவன் பூதாதிஸர்வத்தையும் அறிகிறான். பரிணாமத்ரய ஸம்யமத்தால், த்ரிகால ஞானம் உதிக்கும்.

17. சப்தம் என்றால் வர்ணத்வனிரூபம்; அர்த்தம் என்றால் ஜாதி, குணக்ரியாதி; ப்ரத்யயம், ஞானம்; இவைகளின் இதரேதர அத்யாசத்தால் புத்தியில் ஸங்கீர்ண ஞானம் ஏற்படுகிறது. அவைகளைப் ப்ரவிபாகம் செய்து ஷஷ்டி ப்ரவிபாகத்தில் ஸம்யமம் செய்தால் அவனுக்கு மிருகம், பசுமுதலானதுகளினுடைய சப்தங்களின் ஞானம் உண்டாகும், I-42 சூத்திரத்தை இந்த சூத்திரத்துடன் வாசிக்கவும்.

18. வாஸனா ஸம்ஸ்காரங்கள் இருவகைப்படும். சிலதுகள், ஸ்மிருதியை உண்டுபண்ணக்கூடிய பலம் உடையதுகள். சிலதுகள ஜாதி, ஆயுஸ்போகங்களை உண்டுபண்ணக்கூடிய தர்மாதர்மரூபம் உள்ளதுகள். ஷஷ்டி ஸமஸ்காரங்களில் ஸம்யமம்செய்தால் முன் அனுபவித்ததுகளும் முன்ஜன்மங்களில் அனுபவித்த ஜாத்யாதிகளும் யோகி ப்ரத்யக்ஷமாய்ப்பார்ப்பான். II 39 ஐப்பார்க்கவும்.

19. முகராகாதிலிங்கங்களினால் உண்டாகும் ப்ரத்யயங்களில் ஸம்யமம்செய்தால், பரசித்த ஞானம் தெரியவரும்,

20. அந்தச்சித்தம் ஆலம்பனத்துக்கு விஷயமாகமுடியாது. ஆனால் சித்ததர்மஞானத்தை யவலம்பித்து ஸம்யமம் செய்யமுடியும்.

21. காயத்தின் ரூபத்தில் ஸம்யமம்செய்தால், க்ராஹ்ய சக்தியை ஸ்தம்பனம்செய்து, சக்ஷு: ப்ரகாசமான ஸக்வதர்மத்தை ஸம்யோகம் செய்வதை விலக்கி, அந்தர்தானம் அடையும் சக்தி உண்டாகும். ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் ஆகாசத்தில் மறைந்து நிர்ப்பான். இதுபோலவே சப்தாதி அந்தர்தான சக்திகளும் உண்டாகும்.

22. பூர்வக்ருதம் கர்மம் இருவகைப்படும். கார்யகாரண அபிமுக்கியமாய் சீக்கிரம்பலனைக் கொடுக்கக்கூடியதுகளுக்கு ஸோபக்ரமம் என்றும், காலாந்திரத்தில் பலனைக்கொடுக்கக்கூடியதுகளுக்கு நிருபக்ரமம் என்றும் பெயர். அவைகளில் ஸம்யமம் செய்தால் சரீரவியோககாலம் தெரியும், ஆத்யாத்மிக அரிஷ்டங்கள் மூன்று விதப்படும். (1) காதை விரலைக்கொண்டு அடைத்தபோது கோஷச்ரவணமின்மை, (2) விகிருத புருஷதர்சனம், (3) ஸ்வர்காதி பதார்த்த தர்சனம். இவைகளினால், யோகியில்லாத சாமான்ய ஜனங்களுக்குக்கூட அரிஷ்டஞானம் ஏற்படலாம். ஆனால் அவனுடைய ஞானம் அவ்வளவு நிச்சய ஞானமல்ல. யோகிக்கோவெனில் நிச்சய ஞானம் உண்டாகும்.

23 மைத்ர்யாதி குணங்களில் ஸம்யமம் செய்தால் பலன்கள் உண்டாகும் I, 33ஐ இத்துடன் வாசிக்கவும்.

24. யானை முதலான பலங்களில் ஸம்யமம் செய்தால் அந்தந்த பலங்கள் உண்டாகும்.

25. Iம் பாதம் 35, 36 சூத்திரங்களில் சொல்லப்பட்ட ப்ரவ்ருத்யாலோக பாவனையால் அந்த: கரணத்தினும், இந்திரியங்களினும் பரமாணு பர்யந்தமும், ரஸாயனாதிகள், இவைகளின் ஞானம் உண்டாகும். III, 49ஐ பார்க்கவும்.

26. வலதுகண்ணில் ஸம்யமம் செய்தால் ஸப்தலோக ஞானம் கிடைக்கும்.

27. இடதுகண்ணில் ஸம்யமத்தால் தாராவ்யூஹ ஞானம் கிடைக்கும்.

28. த்ருவத்தில் ஸம்யமம் செய்தால், நக்ஷத்திரம், கிரஹம் முதலானதினுடைய கதிஞானம் தெரியும்.

29. நாபிசக்ர ஸம்யமத்தால், சரீரம், மலம், தாது, நாடி முதலானதுகளின் அவஸ்தான ஞானம் உண்டாகும்.

30. நாக்கின் கீழேயுள்ள கண்டகூபத்தில் ஸம்யமம் செய்தால் க்ஷுத்பிபாஸா நிவர்த்தி யுண்டாகும். அதாவது பசி, தாஹம் நீங்கும்.

31. கண்டகூபத்தின் அடியில் கூர்மநாடியின் ஸ்தானம். அதில் ஸம்யமம் செய்தால் மனஸ் ஸ்தைர்யம் உண்டாகும்.

32. ப்ருஹ்மரந்த்ரமான ஜ்யோதிஸ் ஸ்தானத்தில் ஸம்யமம் செய்தால், ஸித்ததர்சனம் லபிக்கும்.

33. ப்ராதிபம் என்ற தாரக ஞானம் ஏற்படும்காலத்தில் ஸம்பமத்தின் அவச்யமில்லாமலே, ஸ்வதஸ்ஸித்தமாகவே, ஸர்வஜ்ஞத்வ சித்தி உண்டாகும். III, 54ஐயும் பார்க்கவும்.

34. ஹ்ருத் புண்டரீகாத்திலில் ஸம்யமம் செய்தால், தன்னுடையவும், பிரருடையவும், சித்தஸம்வித், உண்டாகும்.

35. ஸத்வம். ப்ரதானத்தின் ப்ரகாச பரிணமம். புருஷன் போக்தா. போக்த்ருபோக்ய ஸம்யோகத்தால், அஹங்காரம் ஜனிக்கிறது. பார்த்தத்தைக் காட்டிலும் மேலான ஸ்வார்த்தத்தில், ஸம்யமம் செய்தால், அஹங்காரம் நீங்கி புருஷஞானம் ஏற்படும்.

36. மேற்கண்ட ஸம்யமத்தின் பலனுவது:—புருஷ ஸம்யமத்தால் வ்யுத்தித தசையிலும், ஸித்திகள் உண்டாகும். ப்ராதிபம் 33வது சூத்திரத்தில்கண்ட ஞானம். இந்த சூத்திரப்படி பஞ்சேந்திரியங்களிலும், திவ்யஞானம், லபிக்கும்.

37. மேற ஸித்திகள், ஸமாதிப் ப்ரதிபந்தங்களாகும். வ்யுத்தான தசையில்தான், ஸித்திகளுண்டாகுமானதால், முக்கிய மோக்ஷ ஸித்திக்கு விக்னமாகும்.

38. பந்தகாரணம் சிதிலிதமாய் விட்டபடியினாலும், சித்தப் பிரசார வேதனையுண்டாய்விட்டபடியாலும், யோகி, கர்மநாசத்தை யடைந்தவனாகிறான். இனி பாகாயப்பிரவேசம் செய்ய சாமர்த்திய முடையவனாகிறான்.

39. ஹ்ருதயத்தில் ப்ராணன்; குதத்தில் அபானன்; வ்யா னன் ஸர்வசரீரத்திலும், சஞ்சரிக்கிறான்; ஸமானன் நாபிதேசத்தில்; உதானன் கண்டதேசத்தில்; ஜாலந்தர பந்தமென்னும் ஸாதகத்தின் மூலம் உதான ஜயத்தால், ஜலம். சேர், முள் முதலானதினுடைய பாதையன்னியில், ஸஞ்சாரம் செய்ய யோகஸித்தியுண்டாகும்.

40. ஸமானஜயத்தால் ப்ரஜ்வலன ஸித்தியுண்டாகும்.

41 ச்ரோத்ரம், தேசம். ஆகாசம் தேகி ஷ்டி ஸம்பந்த ஸம்ய மத்தால் திவ்யச்ரோத்ரம் உண்டாகும்.

42. அதே மாதிரி காயாகாசஸம்பந்த ஸம்யமத்தால், லகு தூலதாப்ராப்தியும், ஆகாசகமனசக்தியுமுண்டாகும்.

43. சரீரத்திற்கு வெளியில், மனோவ்ருத்திக்கு மஹாவிதேஹை என்று பெயர். சரீர அஹங்காரம் போனபிறகு உண்டாகும் வ்ருத்திக்கு இப்பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஸம்யமம் செய்தால், ஆவரணக்ஷயம் ஏற்படும். II, 52ஐ சேர்த்துவாசிக்கவும்.

44 மேர்கண்டபிரகாரம் பாஹ்ய, ஆப்யந்தர ஸித்திகளைக் கூறிவிட்டு, ஸமாதிக்கு உபயோகஸித்திகளைச் சொல்லத்தொடங்கு கிறார்:- பஞ்சபூதங்கள், பஞ்சதன்மாத்திரைகள், ஸத்வ ரஜஸ் தமஸ் ஆக 3 குணங்கள், இவைகளில் ஸம்யமத்தால், பூதஜயஸித்தி.

45. பிறகு அணிமாதி அஷ்டஸித்திகள் ஏற்படும்; அடுத்த சூத்திரத்தில் சொல்லப்போகிற காயசம்பத்தும், அவைகளுக்கு பிரதிபந்தகங்களால் நீங்கின்மையும் லபிக்கும். அஷ்டஸித்திகளாவன:- அணிமா, மஹிமா, கரிமா, லகிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஈசித்வம், வசித்வம். ஆக எட்டுமே 36வது முதல் 45வரை சூத்திரங்களில் கண்ட ஸித்திகளின் ஸாதகபாதகங்களை கவனிக்கவும்.

46. காயசம்பத்தாவன:- ரூபம், லாவண்யம், வஜ்ரகாய ஸித்தி, பலம். ஆக நான்கும் உண்டாகும்.

47. (1) விஷயாபிமுகீயாயுள்ள விருத்தி (2) ஸாமான்ய ப்ரகாசமாயுள்ள ஸ்வரூபம் (3) அகங்காரானுகமமாயுள்ள அஸ்மிதா (4, 5) அன்வயம், அர்த்தவத்வம், என்ற விஷயங்களைப் பற்றி முன்னமேயே விவரணம் செல்லியாய் விட்டது. மேற் 5 விதஅவஸ்தைகளிலும் ஸம்யமம் செய்தால் இந்திரிய ஜயஸித்தி யெனப்படும்.

48. சரீரத்திற்கும், மனஸ்ஸுக்கு ஏற்றபடி கதிலாபம் உண்டானால் மேற் ஸித்திக்கு மநோஜவித்வம் என்று பெயர். காயசம்பத்தமில்லாமல் இந்திரியங்களின் வ்ருத்திலாபத்திற்கு, விகரணபாவம் என்றுபெயர். ஸர்வஸித்வஸித்திக்கு ப்ரதான ஜயமென்றுபெயர். ஜிதேந்திரியனுக்கு இந்தசித்திகள் லபிக்கும். புராணத்தில் இதை பரசுராமன் கதையாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

49. அந்த: கரண ஜயம் இப்போது கூறப்படுகிறது:- அந்த: கரணத்தில் ஸம்யமம் செய்தால் விவேக க்யாதி உண்டாய் குணங்கள் மூன்றும் தூலர்க்கு, ஸர்வபாவாதிஷ்டாத்ருத்வமும், ஸர்வக்ஞத்வசக்தியும் உண்டாகும். I, 36 சூத்ரத்தையும். III, 25யும் பார்க்கவும். இந்த சித்திக்கு விசோகா வென்று பெயர்.

50. அதற்கும் மேல், வைராக்யம் ஏற்பட்டால் அவித்யாதிகள் நிர்மூலமாய் ஆத்மந்திகீ துக்க நிவர்த்தி பூர்வம் கைவல்ய சித்திகிட்டும். I. 15; I. 37 சூத்ரங்களைச்சேர்த்து வாசிக்கவும்.

51. ஸ்திதி உண்டாவதற்கு உபாயமாவது:—ப்ரதான ஜயத்திற்கு மதுமதீ பூமியென்று பெயர். அந்த பூமிக்கு வரும்போது தேவதைகளால் விக்னங்கள் உண்டாக்கப்படும். மேற் ஸித்திகளில் ஸங்கமும் கூடாது. ஸ்மயமும் கூடாது. வெகு உஷாராய் இல்லாவிடில் ஸமாதியில் உத்ஸாஹம் கெட்டு அனர்த்தத்திற்கு ஹேதுவாகும் சுந்தரகாண்டத்தில் ஹனுமார் கதையால் இது விஷயம் விவரிக்கப் பட்டிருக்கிறது.

52. கூஷப், க்ரமம் இவைகளில் ஸம்யமம் செய்வதினால், விவேகஞானம் உண்டாகும்.

53. ஜாதி, லக்ஷணம், தேசம் இவைகளினல், பதார்த்த பேதங்கள் ஏற்படுகின்றன. துல்யமாயிருக்கிற பதார்த்தங்களுக்கு தேச பேதம் ஏற்படும் போது அதிலும் ஸம்யமம் செய்தால், இரண்டினுடைய பேதப்பிரதிபத்தியும் யோகிக்கு லபிக்கும்.

54. தாரகப்பிரகாசத்தால் விவேகபூர்வம் ஸர்வக்ஞத்வஸித்தியுண்டாகும்.

55. ஸத்வ, புருஷர்களினுடைய சுத்தி ஸாம்ய அவசரத்திற்கு கைவல்யம் என்று பெயர். இதற்குத்தான் மோக்ஷம் என்று பெயர். ஸத்வம் என்றல் அந்த: கரணத்திற்குப் பெயர்.

---

4 கைவல்ய பாதம்.

1. ஸித்திகள் ஐந்து வகைப்படும். (1) பூர்வகர்மத்தை யனுஸரித்து ஜன்மத்தினல் (2) ஔஷதியால் (3) மந்திரத்தால் (4) தபஸ்ஸினல் (5) ஸமாதியினல். முதல் 4 ஸித்திகளும் ஸ்திரமில்லை. 5வதுதான் சாச்வதஸித்தி. 1-ல் வர்ணச்சமத்தின் ப்ரயோஜனம் நன்கு விளங்கும். 2 விரதாதிகளும், ஆஹார நியமங்களும் நாடிசுத்திக்கு அவச்யம். 3. மந்திரத்தினல் மனஸ்ஸமாதானம் ஏற்படும். 4தபஸ்ஸினல் காயேந்திரியஸித்தி(அசுத்திக்ஷயமூலம்). 5 ஸமாதியினல், ஞானமும், ஞானத்வாரேண கைவல்ய சித்தி என்ற மோக்ஷமும் பலன்.

2. ப்ரக்ருதிக்குத் தக்கபடி ஜாத்யந்தர பரிணமம்; அதாவது மருபிறப்பு.

3. வரணபேதத்தினல் க்ஷேத்ரிகன் ஒரு க்ஷேத்ரத்திலிருந்து மற்றொரு க்ஷேத்ரத்திற்கு ஜலம் பாய்ச்சுகிறமாதிரியே, ப்ரக்ருதி, ஒரு ஜன்மத்திலிருந்து இன்னொரு ஜன்மத்தைக் கொடுக்கிறது. நிமித்தம் தேவையில்லை.

4. விஷ்ணுதான் மஹாயோகி. ஒரேகாலத்தில் அக்கினயினிடத்திலிருந்து கணங்கள் உண்டாகிறமாதிரி அஸ்மிதா மாத்திரத்தால் ஒரேகாலத்தில் அநேக சித்தங்களை நிர்மாணம் செய்கிறான்.

5. சேதஸ்களின் வ்யாபார நாஞ்வத்தில், அதிஷ்டாத்ருத் வேன யோகியினுடைய ப்ரேரக சித்தம் ஒரே சித்தமே தான். ஆகையால் பின்ன மித்தத்வமில்லை.

6. Iவது சூத்திரத்தில் குறிப்பிட்ட 5 வித வ்ருத்திகளில் 5வது ஒன்று மட்டும் அசுசயம் அதாவது கர்மவாஸனாரஹிதம். ஆகையால்தான் 5வது சாச்வத வ்ருத்தியைத்தரும். பாக்கி நாலும் நச்வரமே.

7. சுபபலனைக் கொடுக்கக்கூடிய யாகாதிகர்மங்கள் சுக்லம். அசுபபலனைக் கொடுக்கக்கூடிய ப்ருஹ்மஹத்யாதிகள் கிருஷ்ணம். இரண்டும் கலந்திருந்தால் சுக்கில கிருஷ்ணம். தானாதி கொடுப்பவர்களுடையது சுக்லம். மனுஷ்யர்களுடையது சுக்லகிருஷ்ணம். யோகிகளுடையது, அதாவது, சன்னியாசிகளுடையது அசுக்ல கிருஷ்ணம். எனெனில், பலத்தியாக பூர்வகமாய் அவர்கள் கர்மங்கள் செய்கிறபடியால், கர்மங்கள் பலனைக்கொடுக்க அவகாசமில்லை. மற்றவர்களுக்கு மூன்றுவித பலனையும் கொடுக்கும்.

8. இருவித வாஸனைகளில் அவித்யாவாஸனையால் வரும் ஜாத்யாயுர்போகங்களைப்பற்றி முன்னமேயே நிர்ணயம் செய்தாய் விட்டது. தேவாதிகள், ஸ்ம்ருதி மாத்திரத்தினால், ஆரம்பம் செய்கிற சரீரங்களுக்குத்தக்கபடி அவை அவைகளுக்கு அனுஸரணையான வாஸனைகள் ஏற்படும்.

9. ஜாதி, தேச, காலங்களால், யோன்யந்தர ஸஹஸ்ர வ்யவதானங்கள் ஏற்பட்டபோதிலும் மருபடி ஒரு ஜாதி ஏற்படும் போது ஸ்வானுரூப ஸ்ம்ருதனத்தில் ஆனந்தர்யம் அதாவது நைரந்தர்யம் எப்படி வந்து சேர்ந்ததென்றால், ஸ்ம்ருதியும் ஸம்ஸ்காரமும் ஏகரூபமாய் இருக்கிறபடியால், கார்யகாரண பாவானுபபத்தியை இந்த சூத்திரத்தால் நிராகரணம் செய்கிறார்.

10. "சுகஸ்வரூபம் எனக்கு எப்போதும் இருக்கட்டும். ஒரு காலத்திலும் எனக்கு தேஹவியோகம் வேண்டாம்" என்ற மஹாமோஹ ரூபமான ஆசை நித்யமாயிருப்பதால், வாஸனைகள்

அனுதிகளென்று கூறப்படுகிறது. வாஸனைகள் எப்படி உண்டாயிற் றென்று அறிவதற்கு இப்போது முடியாதபடியால், "அனுத்ய வித்யாவாஸனயா" என்று கூறுகிறோம். மேலே சங்கல்பமே வாசனை காரணம்.

11. வாஸனைகள் தூலித்து போகும் வழி:—
வாசனைகளின் பிறகு அனுபவம் (ஹேதுவாக) ஏற்படுகிறது. பஞ்ச சரீராதி ஆச்ரயம் புத்திதத்வம். அனுபவத்திற்குக்காரணம் ஆலம்பனம். மேலே அனந்தவாசனைகளும் பிரதம சங்கல்பத்தை அவலம்பிப்பதேதான். அந்தப்ரதம சங்கல்பம் ஒழிந்தால், வாசனையின் அபாவம் பிறகு தானே ஏற்படும்.

12. ஸத்திற்கு அபாவம் கிடையாது. அசத்திற்கு உற்பத்தி கிடையாது. உற்பத்தி விநாசமில்லாத தர்மி ஏகரூபன். தர்மங்கள் அநேக ரூபங்கள். ஆகையால் அதீதாநாகதம் அத்வ பேதத்தால் ஸ்வரூபத: இருக்கவேயிருக்கிறது. ஆகையால் அபவர்க்க பர்யந்தம் ஏக சித்தம் தர்மியேதான்.

13 தர்மிதர்மங்கள் வ்யக்தமாகவும், சூக்ஷ்மம் (அதாவது அவ்யக்தரூபம்) ஆகவும் இருந்துகொண்டு சத்வாதி குணத்ரயமாகப் பரிணமிக்கின்றன.

14. குணங்கள் மூன்றுனபோதிலும், பரிணமம் ஒன்றே அவைகளின் கார்யமாதலால், அங்காங்கி சம்பந்தத்தால் வஸ்து தத்வம் ஒன்றேதான்.

15. வஸ்து சாம்யமானாலும் சித்தபேதத்தினால் ஞானம் ஜ்ஞேயம் என்று பிரிவுகளாக ஏற்படுகிறது. சுகாதி நானாரூப சித்த பரிணமம் காரணம்.

16. வஸ்து ஏக சித்ததந்திரமல்ல. அப்படியிருந்தால் ப்ரமாண மில்லாமல் போய்விடுமே? அப்படியானால் என்ன கதியாகும்.

17. சித்தத்திற்கு உபராகாபேக்ஷிதத்வமிருப்பதால், வஸ்து ஞாதமாகவும், அஜ்ஞாதமாகவும் ஏற்படுகிறது. ஆகையினால்

தான் ஏக காலத்தில், சர்வ அர்த்தங்களையும், க்ரஹிக்கச் சித்தத்திற்கு சாமர்த்யமில்லை.

18. புருஷனுக்குப் பரிணமித்வம் உண்டோ வென்ற சங்கையை இந்த சூத்திரம் பரிஹரிக்கிறது:—புருஷனுக்குப் பரிணமம் கிடையாது. ப்ரபுவாயிருக்கிற புருஷன், சதாசித்த வ்ருத்திகளை யறிகிறான்.

19. சித்தமே ஸ்வப்ரகாசமா யிருந்தாலென்ன? புருஷனை விட்டு வேறாக சித்தம் என்ற க்ரஹீதாகல்பனம் எதற்காகவென்ற சந்தேக பரிஹாரத்தின் பொருட்டு பின்வருமாறு சூத்திரம் வரையப்படுகிறது:—சித்தம் ஸ்வப்பிரகாசமல்ல. புருஷவேத்யமாக விருக்கிறது. ஏனெனில் சித்தம் த்ருச்யம்.

20. ஓரேசமயத்தில், உபய ஸ்வரூபார்த்தத்தை, க்ரஹிப்பதற்கும், அவதாரணம் செய்வதற்கும், சித்தத்திற்கு சக்தியில்லை. ஆகையால் அது ஸ்வப்பிரகாசமல்ல.

21. புத்திக்கு க்ரஹணசக்தியில்லாவிட்டால் புத்யந்தரம் இருக்கலாகாதோவெனில்:—அப்படியானால் அனந்தபுத்தி ஏற்பட்டு அனவஸ்தான தோஷமும் ஸம்பவிக்கும். அர்த்தப் ப்ரத்யக்ஷமும் உண்டாகாது. ரூபாதி ஸ்ம்ருதி சங்கரமும், சம்பவிக்கும். ஸ்ம்ருதி எந்த விஷயத்தை யவலம்பிக்கிறது என்று அறிவதற்கு மிடமில்லாமல்போகும்.

22. அன்யத்ர கமனத்திற்கு, ப்ரதிஸஞ்க்ரம மென்று பெயர். அப்படியில்லாததற்கு அப்ரதிஸஞ்க்ரமமென்று பெயர். அப்படிப்பட்ட சித்தசக்தியும், புருஷனும் ஏகரூபம். அந்தபுருஷ ஸன்னிதியில் சித்தசக்தி, தத் ஆகாரத்தையடைகிறது. புத்திவ்ருத்தி, சூன்யமாகிறது. அப்போது புத்திக்குத்தன் ஸ்வரூபம்தெரிகிறது.

23. த்ரஷ்டாபுருஷன். தேனஉபரக்தம், ததாகாரதாபத்தி, ப்ராப்தம், த்ருச்யோபரக்தம், விஷயாகார பரிணமம், எப்பொழுது உண்டாகிறதோ அப்பொழுது சித்தம் ஸர்வார்த்தக்ரஹணஸமர்த்தமாகிறது.

24. அதேசித்தம் ஸங்க்யாதீதமான வாசனைகளுடன் கூடின தாகவும் நாலுரூபத்தையடைந்ததாயிருந்தும் தன்யஜமானனுன புருஷனுக்கு (அதாவது போக்தாவுக்கு) போகாபவர்கலக்ஷண மான அர்தங்களை, ஸாதிக்கிறது. இதுவே புருஷன் த்ரஷ்டாவென் பதற்குப் ப்ரமாணம்.

25. ஸத்வம் வேறு, புருஷன் வேறு, என்று ஞானேதயம் ஒருவனுக்கு ஏற்படும்போது, சித்தத்திலிருந்த ஆத்மபாவனை அவனுக்கு நிவர்த்தியாகும். சித்தமே, கர்தா, க்ஞாதா, போக்தா என்ற அபிமானம் நீங்கும்.

26. எந்தச்சித்தமானது அக்ஞான நிம்னமாய், பஹிர்முகப் பட்டு, விஷயபோகபலனை விளைவித்ததோ, அதேசித்தம் விவேக நிம்னமாகி, விவேகமார்கமான அந்தர்முகப்பட்டு, கைவல்யப்ராக் பாரமாய் (அபிமுகமாய்) கைவல்யபலனைச்சம்பாதித்துக் கொடுக் கிறது.

27. அந்த சமயத்தில் உண்டாகும் அந்தராயங்களுக்கு ஹானோபாயம்:—ஸமாத்யந்தராளங்களில் உண்டாகும், வ்யுத்தான ஸம்ஸ்காரங்களெல்லாம், ஸமாதிப்ரக்ஞா ஸம்ஸ்காரங்களினால், உன்மூலனம் ஆகும்.

28, அவித்யாதிக்லேசங்களின் ஹானம் முந்தியே கூறப் பட்டது. அதேமாதிரியே க்லேசத்திற்கு ஹேதுவான ஸம்ஸ்கா ரங்களையும் ஹானம் செய்யவேண்டும். தக்தபீஜம் எப்படி மறுபடி யும் முளைக்காதோ அதேமாதிரி க்ஞானாக்னியினால், எரிபட்ட ஸம் ஸ்காரங்களும் மறுபடி சித்த பூமியில் முளைக்கஹேது வில்லாமல் போகும்.

29 பலானு ஸந்தானமில்லாமல் செய்யப்படுகிற, த்யானஸ்வ ரூபத்தில், ஏகதானதாப்பிரத்யயப் ப்ரவாஹம் ஏற்படும். வரவரப் பிரகாசம் அதிகரிக்கும், நிரந்தரமாய் விவேக, க்யாதி ஏற்படும் போது தர்ம மேகஸமாதி விளித்திக்கும். ப்ரகிருஷ்டம் அதாவது அசுக்லகிருஷ்ணம் என்ற, தர்ம பரம புருஷார்த்தஸாதகத்தை மேஹனம் பண்ணுவதால் (அதாவது வர்ஷிப்பதால்) தர்ம மேகஸமாதி எனப்படும். ஆகையால் ப்ரகிருஷ்டதர்மம்தான்,

ஞானஹேதுவென்று ஸாதிக்கப்பட்டது. (IIம் பாதம் 26-ம் சூத்திரத்தையும் சேர்த்து வரசிக்கவும்.)

30 ருஷி ஸமாதிஸித்தியால் க்லேசகர்ம நிவர்த்தி பலிக்கிறது.

31 அப்போது ஆவரண மலங்களாகிய க்லேசம் அறுத்தும் விலகி, சரத் காலத்தில், மேகங்கள் விலகின ஆகாயத்தில் சூரியன் போல், ஞானம்விளங்கும். ஞானம் அனந்தமாகும். க்ஞேயம் அல்ப கணனமாகும். அதாவது க்லேச மன்னியில், ஸர்வக்ஞத்வஸித்தி யுண்டாகும். II 52 சூத்திரத்தைச்சேர்த்து வாசிக்கவும்.

32. க்ருதார்த்தமான ஸத்வ ரஜஸ் தமோ குணங்களுக்கு இனிமேல் வேலையில்லை. போகாபவர்க்க புருஷார்த்தங்கள் அனுபவித்தாய்விட்டன. புருஷார்த்த சமாப்திவரை அனுலோமமாயும் பிரதிலோமமாயும் ஏற்பட்ட அங்காங்கிபாவ, ஸ்திதியின் (இனிச் சொல்லப்படப்போகிற) கிரமசமாப்தி, ஏற்படுகிறது. க்ரமசமாப்தி என்பது நிஷ்டை. அதாவது புனர் உத்பவமில்லை யென்ற ஸ்திதி.

33. க்ஷணம், க்ஷணத்திற்கு விபரீதமானது. க்ரமம். க்ஷணம் ஒன்றேதான். அநேக க்ஷணங்கள் உண்டாய் க்ரமம் வந்ததாக உண்டாகிற பிரம ஞானத்திற்கு க்ரமம் என்ற பெயர். க்ரமத்தின் லக்ஷணம் வ்யாசபாஷ்யம் தன்கு ஆராய்ந்தால் ஒழிய, சுலபமாய் விள்ளாது.

34. கைவல்ய ஸ்வரூபம் இங்கு கூறப்படுகிறது;—சமாப்த மான போகாபவர்கலக்ஷண புருஷார்த்த குணைக்ரயங்கள், ப்ரதி லோமமாய் அஸ்தமிக்கும். விகாரம் நீங்கும். சிதிசக்திக்கு ஸ்வரூப சாரூப்ய நிவர்த்தி ஏற்படும். ஸ்வரூப மாத்ரை அவஸ்தானம் ஏற்படும். அதற்குக் கைவல்யம் என்ற பெயர். சூத்திரத்தில் (வா,கார) ப்ரயோகத்தால் இரண்டுவிதம்போல் காட்டப்பட்டாலும் கைவல்யவஸித்தி ஒன்றே. இதர தர்சனங்களிலும் இதே வஸித்தாந் தம் தான் ஸாதிக்கப்பட்டிருக்கிறது ஸ்வரூபஸாரூப்யமிதரத்ர என்ற I பாதம் 4வது சூத்திரத்தில் கண்ட ஸ்வரூபஸாரூப்ய பரி ஹாரத்தால் யோகசாஸ்த்திரத்தில் கைவல்யப்ராப்தி ஸாதிக்கப் படுகிறது. இதர வஸித்திகளுக்கு, விலக்ஷணமானதும் ஸர்வவஸித்தி களுக்கும் மூலபூதமாயிருக்கும், ஸமாதி வஸித்தியே, கைவல்ய மென்று ஸாதிக்கப்பட்டது. ஓம் தத் ஸத்.

This little book is
DEDICATED TO CHITI-SAKTI.

as SHE presides over the destinies of all.

संहृताशेषपाषंडा सदाचारप्रवृत्तिका
तापत्रयाग्निसंतप्तसमाह्लादनचंद्रिका ॥
तरुणी तापसाराध्या तनुमध्या तमोपहा
चितिस्तत्पदलक्ष्यार्था चिदेकरसरूपिणी ॥

This book if properly understood and acted upon, will bring about the international peace of the world and deal a deathblow to all false religions.

C. A. SUBRAHMANYAN.
The Author.
9–12–32.

This book is available for sale at No. 98. Sandaipettai Street, Madura. Price per copy **8**. AS.

Only a few copies are for sale. Apply Sharp to the Author.

C. A. S.